**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.95** **நாள்: 19.06.2024**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தாயுமானவர் திட்டம் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற துறை மாவட்ட நிலை அலுவலர்களுக்கான புரிந்துணர்வுப் பயிற்சியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தாயுமானவர் திட்டம் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற துறை மாவட்ட நிலை அலுவலர்களுக்கான புரிந்துணர்வுப் பயிற்சியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (19.06.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்து, பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டு வழங்கினார்.

**மாண்புமிகு மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

தமிழ்நாடு அரசு வறுமையின் மீதான இறுதி தாக்குதல் என்ற நோக்கத்துடன் நிதிநிலை அறிக்கை 2024-25இல் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களால் தாயுமானவர் என்ற புதிய திட்டத்தை அறிமுகம் செய்து 19.02.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான இந்த தாயுமானவர் திட்டத்தின் முழு நோக்கமே ஏழை மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மக்களைக் கண்டறிந்து அரசின் திட்டங்களின் மூலம் தேவையான உதவிகளைச் செய்து, சமூக மற்றும் பொருளாதாரத்தை மேம்படையச் செய்வதே ஆகும்.

மிகவும் வறியநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கடைக்கோடி ஏழைக் குடும்பங்களையும் கண்டறிந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் மிகவும் வறியநிலையில் உள்ள சுமார் ஐந்து இலட்சம் ஏழைக் குடும்பத்தினருக்கு அரசின் உதவிகள் அனைத்தையும் ஒருங்கிணைந்து வழங்கி, விரைவில் அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்திட அரசு உறுதியாக உள்ளது.

முதற்கட்டமாக நகர்ப்பகுதிகளில் ஏழை மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய வசிப்பிடங்களைக் கண்டறிந்து அவர்களின் குடும்பங்களை வரிசைப்படுத்தி, ஏழை மற்றும் விளம்பு நிலையில் உள்ள மக்களை அடையாளம் காணக்கூடிய ஒரு செயல் முறையாகும்.

இன்று வெளியிடப்பட்ட பயிற்சிக் கையேட்டில் ஏழை மக்களின் வசிப்பிடங்களை அடையாளம் காணுவதற்கான குழுவினை அமைத்தல், புள்ளி விவரக் கணக்கெடுப்பு

குழுவினை அமைத்தல் மற்றும் செயல்பாட்டு வழிமுறைகளை ஏற்படுத்துதல், செயல்முறைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நகர சபைக் கூட்டத்தில் திட்டத்தினை அறிமுகம் செய்தல் போன்ற ஒவ்வொரு குழுக்களுக்கான பொறுப்புகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஏழை மக்களின் வசிப்பிடங்களை அடையாளம் காணும் வகையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலர், நகர்ப்புர சுகாதார ஆய்வாளர், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பினைச் சார்ந்த அலுவலர், சமுதாய அமைப்பாளர்கள் *(Community Organiser)*, சுய உதவிக் குழு/பகுதி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர், சமுதாய வளப்பயிற்றுநர் *(CRP)*, மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் மகளிர் சுகாதாரத் தன்னார்வலர்கள் ஆகியோர் உறுப்பினர்களாகச் செயல்படுவர்.

இத்திட்டமானது முதற்கட்டமாக தமிழ்நாட்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில் தேனாம்பேட்டை மண்டலத்தில் வார்டு-111க்குட்பட்ட அழகிரி நகர், வார்டு-110க்குட்பட்ட புஷ்பா நகர்-காமராஜபுரம் விரிவாக்கம், வார்டு-109க்குட்பட்ட கிழக்கு நமச்சிவாயபுரம், திருவொற்றியூர் மண்டலத்தில் வார்டு-7க்குட்பட்ட பெரியார் நகர் ஆகிய பகுதிகளில் முன்மாதிரி கணக்கெடுப்பு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னோடி பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் கணக்கெடுப்பு முடிவுற்றப் பின்னர் சென்னையின் அனைத்து பகுதிகளிலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்திடவும், அனைத்து நலிவுற்ற குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களின் வாழ்வாதாரத்தினை அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களின் ஒத்துழைப்புடன் மேம்படுத்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திரு.த.விசுவநாதன் (கல்வி), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன், (வரிவிதிப்பு (ம) நிதி), திரு.தா.இளையஅருணா (நகரமைப்பு), மண்டலக்குழுத் தலைவர்கள் திரு. ஏ. வி. ஆறுமுகம், திரு. எஸ். நந்தகோபால், திரு. நேதாஜி யு. கணேசன், திரு. பி. ஸ்ரீராமுலு, திரு. நொளம்பூர் வெ. ராஜன், திரு. எஸ். வி. ரவிச்சந்திரன், திரு. வி. இ. மதியழகன், தமிழ்நாடு வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் திரு.வே.பிச்சை, இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் திருமதி பா. மதுமதி, உதவி திட்ட அலுவலர்கள் திருமதி ஆர். சாந்தி, திரு.சி.பெருமாள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**